வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW1 |
| நாள் | : | 04.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவா | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | ரமேஷ் | தொழில் | : | |
| கிராமம் | : | கீழச்சேரி | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை :**

நான் கீழச்சேரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். நான் BBA படித்துள்ளேன். நான் தாத்தா பெயர் செல்வம், கீழச்சேரி பக்கத்தில் உள்ள மேட்டுமா நகர் உள்ள ITI –ன் உரிமையாளர் செவ்வேல் என்பவர் ஆவார். அதை பராமரிப்பது கோவிந்தசாமி ஆவார். அந்த இடத்தில் கோவில் கட்டுவதற்கு செக்குரிட்டி வேண்டும் என்பதறகு என் தாத்தாவை அழைத்தார்கள். 26.04.2024 இரவு அழைத்து சென்றார்கள். மருநாள் காலை 6.30 மணி அளவில் வீரையா என்ற கொத்தனார் அவர் வந்து பார்க்கும் போது என் தாத்தா தலையில் பலமாக அடிப்பட்டு குப்பரவாக விழுந்திருந்தாக சொன்னார்கள். அவர் கோவிந்தசாமிக்கு தெரிவித்தார். என்னுடைய உறவினர்கள் எனக்கு தாத்தா இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். நான்அங்கு பார்த்தேன் தலையில் அடிப்பட்டு குப்பரவாக படுத்திருந்தார். உடனே மப்பேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும் புகாரை நான் தான் எழுதினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கீழச்சேரியிலிருந்து மேட்டுமா நகர் வரை எவ்வளவு துரம் என்றால் நடந்து செல்லும் துரம் தான். என் தாத்தா இறக்கும் சமயத்தில் அவருக்கு 84 வயது என்றால் சரிதான். 27.04.2024 காலை மேட்டுமா நகர் செல்லம் போது

காலை 8.00 முதல் 8.30 மணி இருக்கும் நான் அங்கு போகும் போது ஊர் பொது மக்கள் அங்கு இருந்தார்கள். அந்த சமயத்தில் சரவணன் மற்றும் கோவிந்தசாமி இருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. நான் சுமார் 10.30 மணி வரை நான் அங்கு தான் இருந்தேன். நான் அங்கு சொல்லும் போது அங்கு மப்பேடு போலிசார் அங்கு இருந்தார்கள். அப்போது போலிசார் என் தாத்தாவை போட்டோ எடுத்தார்கள். நான் முதல் முதலாக அன்றைய தினம் தான் அங்கு சென்றேன். ITI–க்கு எதிரே 3, 4 கட்டிடங்கள் உள்ளது என்றால் அவ்வாறு கட்டிடங்கள் இல்லை. நான் மப்பேடு காவல்நிலையத்திற்கு 12.00 மணிக்குள் சென்றுவிட்டேன். என் தாத்தாவின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யும் போது நான் மருத்துவனைக்கு சென்று இருந்தேன். நான் சுமார் 1 1/2 மணிநேரம் மருத்துவனையில் இருந்தேன். அங்கே போலிசார்கள் பஞ்சாயத்தார்கள் விசாரணை செய்து கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான். அங்கு சரவணனும் இருந்தார் என்றால் சரிதான் அதில் அவர் கையெழுத்து போட்டாரா என்பதை நான் கவணிக்கவில்லை. போலிசார் புகார் கொடுக்கும் போதே என்னை விசாரணை செய்தார்கள். என்னுடைய புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் என் தாத்தாவை மற்மநபர்கள் தாக்கியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 27.04.2024 அன்று மணவாள நகர் போலிசாா மதியம் 3.00 மணிக்கு மேல் சரவணனை காவல் நிலையத்தில் உட்காரவைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு இரண்டு நாட்கள் உட்கார வைத்து பின்பு மப்பேடு காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தாவை செக்குரிட்டி வேலைக்கு கோவிந்தசாமி தான் சேர்த்தார் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் கொடுத்த புகார் தனிப்பபட்ட முறையில் போலிசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM Digitally signed by S TASNEEM Date: 2026.02.04 10:17:58 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 04.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செவ்வேல் | ஜாதி | : | |
| தந்தை–கணவர் பெயர் | : | இளங்கோ | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் சென்னை செனாய் நகரில் வசித்து வருகிறேன். நான் BSC maths படித்துள்ளேன். என்னுடைய தந்தையாரின் தொழிலை நான் தொடர்ந்து செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கீழச்சேரி மற்றும் சத்திரை மப்பேடு கிராமங்களில் சுமார் 30 ஏக்கர் நிலம் என்னுடைய தாத்தாவுக்கு செந்தமாக இருந்தது. என் தந்தையார் நெய்வேலியில் உள்ள லிக்னைட் கார்ப்பிரேசனில் வேலை செய்து ஓய்வு பெற்று மேற்படி கிராமத்தில் பிள்ளைகள் படிப்பதற்காக கட்டிடம் கட்டி பள்ளியை நடத்திவந்து சரியாக செய்லபடாததால் அதே கட்டிடத்தில் ITI தொடங்கி அதும் சரியாக செயல்ப்படாததால் அந்த இடததை வெறுமென வைத்திருந்தோம். மேற்கண்ட இடததை காசா கிரான்ட் நிறுவனத்தினர் என்னிடம் அனுகி அந்த இடத்தில் தற்போது warehouse கட்டுவதற்கு ஒப்பந்தம் போட்டார்கள். அந்த இடத்தல் ஆரம்பபிப்பதற்க்கு முன்பாக ஒரு பிள்ளை கோவில் கட்டுவதற்கு பூமி பூஜை ஆரம்பபிப்பதற்காக 26.04.2024 அன்று காலை 9.30 மணிக்கு சென்று எங்களுடைய நிலைங்களை கோவிந்தன் பார்த்து கொண்டிருந்ததால் அந்த இடத்தில் சதுர வடிவில் சுத்தம் செய்ய சொல்லினேன். சர்வே எண்.55ஏ மற்றும் 57. அந்த சர்வே எண் நடுவில் கோவில் கட்டுவதற்கு நிலங்களை தயார்படுத்தி நான் ½ நேரம் இருந்து விட்ட

தஞ்சாவூர் சென்றுவிட்டேன். அடுத்த நாள் காலை 27.04.2024 அன்று கோவிந்தன அவர்கள் காலை 6.00 மணிக்கு போன் செய்து பார்த்து கொள்வதற்காக வைக்கப்பட்ட திரு.செல்வம் என்பவர் தலை சிதைக்கப்பட்டு குப்பர விழுந்துகிடப்பதாக என்னிடம தகவல் சொன்னார். அதன் பிறகு கிளம்புவதற்கு தயாராக நிலையில் மப்பேடு காவல் ஆய்வாளர் போன் செய்து ஒரு கொலை எங்கள் இடத்தில் நடந்திருப்பதாக கூறினார். அதன் பிறகு என்னிடம் விசாரணை செய்தார். நான் தஞ்சாவூர்–ல் இருப்பதாக சொன்னேன். அதன் பிறகு சென்னை வந்தேன். அப்போது மணவாள காவல் நிலையத்திற்கு வர ஆய்வாளர் சொன்னார். நான் மணவாள காவல் நிலையத்தில் என்னிடம் நடந்ததை வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். என்னை போலிசார் விசரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் இடம் 30 ஆண்டுகலமாக பரிட்சியமான இடம் என்றால் சரிதான். சம்பவம் இடம் எதிரே பாழ்யடைந்த கட்டிம் 3 உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் சமயத்தில் அந்த கட்டடித்தில் கூலி வேலை வந்து வடஇந்தியர்கள் தங்கியிருந்தார்கள் என்றால் அப்போது கிடையாது அதன் பின் இருந்தார்கள். அன்றைய தினம் மாலை 5.00 மணி அளவில் மணவாள நகர் காவல் நிலையத்திற்கு வந்தேன். நான் காவல் நிலையத்திற்கு வந்து பார்க்கும் போது சரவணனை போலிசார் உட்காரவைத்திருந்தார்கள் என்றால் நான் சொல்லும் போது அவர் அங்கு இல்லை. கோவிந்தசாமி 30 ஆண்டுகாலமாக அவருக்கும் 20 வயது இருக்கும் போது குடும்பத்திற்கு பழக்கம். எங்களுக்கு முன்நின்று செய்து கொடுப்பது வழக்கம். சென்னையில் உள்ள என்னுடைய விட்டிற்கு கோவிந்தசாமி சொல்லி செல்வம் என்பவர் காவளாலியாக இருந்தார். சுமார் 5 வருடமாக இருந்தார். அந்த சமயத்தில் அவர் நல்ல முறையில் தான் பணிபுரிந்தார். கோவிலுக்காக செக்குரிட்டி வேலைக்கு கோவிந்தசாமி அதனாலே தான் பரிந்துரைதார் என்றால் சரிதான். செல்வம் என்பவர் கோவிந்தசாமிக்கு நன்கு பரிட்சியமானவர் என்றாலும் அவருக்கு கோவிந்தசாமிக்கு எந்த வித கருத்துவேறுபாடு கிடையாது. அன்றைய தினம் நான் இறந்த நபரின்

குடும்பத்திற்கு பணம் கொடுத்து உதவி செய்தேன்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.02.04 10:18:05 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.